| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>அந்தோணிசாமி, த/பெ அந்தோணிசாமி | அ.வ.எண்.263/2015 | 30.01.2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

10) சின்னப்ப உடையாருடன் உடன்பிறந்த நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சின்னப்ப உடையாரின் சகோதரரின் மகன் தான் ராயப்ப உடையார் என்றால் சரியல்ல. ராயப்ப உடையார், சின்னப்ப உடையாரின் அண்ணன் ஆவார். மேற்படி ராயப்ப உடையார் சவரியம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்த நபர்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக தான் இருந்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.382/3 ல் 34 சென்டில் என் அப்பாவிற்கு எந்த பாகம் ஒதுங்கியதோ அதனை பொறுத்து தான் நான் அ.வ.எண்.133/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

11) நாங்கள் ஒருவருக்கொருவர் இந்த இந்த பாகத்தை ஒதுக்கி கொண்டோம். அ.வ.எண்.133/2015 ல் சொல்லியுள்ள வழக்க சொத்தானது எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதனை ஒப்புக்கொண்டு தான் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.133/2015 நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தின் மொத்த விஸ்தீரண அளவுகள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தாவா சொத்திற்கு அடுத்த வடபுறம் ஆரோக்கியசாமி மற்றும் அமலதாஸ் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்த வடபுறம் கலையரசி மற்றும் தற்போது பாண்டியன் இருக்கிறார் என்றால் சரிதான். அடுத்த வடபுறம் 3 வீடுகள் உள்ளன. அதற்கு வடபுறம் அண்ணாநகர் செல்லும் தார் ரோடு உள்ளது என்றால்

சரிதான். மேற்சொன்ன இடங்களுக்கு மேற்காக அரியலூர் – இலால்குடி செல்லும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இடங்களுக்கு கிழக்கில் அண்ணாநகர் மனைவிஸ்திரிப்பு உள்ளது என்றால் சரிதான்.

12) அ.வ.எண்.133/2015 ல் தாவா சொத்திற்கு தென்புறம் பிரதிவாதி ஜெயலெட்சுமி இடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்து தெற்கில் ராஜாகண்ணு இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தையும் ஜெயலெட்சுமி கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். அதற்கு அடுத்து தெற்கிலிருந்த அற்புதம் என்பவரிடம் இடம் இருந்தது, அதனையும் ஜெயலெட்சுமி வகையறா கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். பாண்டியன், அமல்தாஸ், ஆரோக்கியசாமி, நான் மற்றும் ஜெயலெட்சுமி வாங்கிய தெற்கில் உள்ள இடம் அதற்கு அடுத்து ராஜாகண்ணு இடம் அனைத்தும் சர்வே எண்.382/3 ல் வரும் என்றால் சரிதான்.

13) சர்வே எண்.382/3 தற்போது 16/3 உட்பிரிவுகளாக உள்ளது என்றால் சரிதான். அமல்தாஸ் மற்றும் ஆரோக்கியசாமி மேற்படி உட்பிரிவில் என்ன சர்வே எண்ணில் உள்ளார்கள் என்றால் சர்வே எண்.16/3 பி ல் உள்ளார்கள். என்னுடைய சர்வே எண்.16/3 சி. அமல்தாஸ் மற்றும் ஆரோக்கியசாமி சர்வே எண்.16/3 பி–ல் உள்ளார்கள். நான் சர்வே எண்.16/3 சி–ல் தான் உள்ளேன், மேற்படி சர்வே எண்ணின் வேறு உட்பிரிவில் நான் இல்லை. அமல்தாஸ் மற்றும் ஆரோக்கியசாமி இருவரும் சர்வே எண்.16/3 பில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு சர்வே எண்.16/3 சி பாத்தியமும் மற்றும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல.

14) அ.வ.எண்.133/2015 வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் சரியாக இருப்பதால் தான் அதனை பொறுத்து வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் கட்டுமானம் கட்டுவதை தடுப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தவுடன் பிரதிவாதிகள் சர்வே எண்.16/3 சி தனக்குதான் பாத்தியம் என்றும், நான் கட்டக்கூடாது என்றும், எனக்கு இடத்தில் உரிமையில்லை என்றும் தடுக்கவந்தார்கள். நான் பாத்ரூம் கட்ட முற்பட்ட இடமானது எனது தாத்தா காலத்திலிருந்து சாக்கு கட்டி கழிவறையாக எங்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், முழு கட்டிடமுமே புதிதாக 2015 ம் ஆண்டில் தான் என்னால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

15) எனது தாத்தாவால் கட்டப்பட்ட இடம் என்பது ஆரோக்கியசாமி மற்றும் அமல்தாஸ் வசிக்கும் வீடாகும் என்றால் சரிதான். நானும் தாத்தா கட்டிய வீட்டில் தான் உள்ளேன். யார் யார் எப்படி ஒதுக்கி கொண்டோமோ அதன்படி தான் சர்வே எண்.16 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் எந்த சர்வே எண் எனக்கு பாத்தியம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்று வழக்குரையில் தெளிவுப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. ஆரோக்கியசாமி மற்றும் அமல்தாஸ் வீட்டின் கதவு எண்.101 என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி நபர்களின் குடியிருந்து வரும் வீட்டின் கதவு எண்.101 என்றாலும் சரியல்ல.

16) நான் அ.வ.எண்.133/2015 ல் சர்வே எண்.16 உட்பிரிவில் எனக்கு எந்த உட்பிரிவு கிடைத்ததோ அந்த உட்பிரிவுக்குண்டான வருவாய் ஆவணத்தை வைத்து தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு எந்த அளவிற்கு மேற்படி சர்வே எண்ணில் சொத்து பாத்தியம் என்று காட்டுவதற்கு வருவாய் ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

17) என்னுடைய அப்பாவுடன் உடன்பிறந்தவர்களும், பங்காளிகளும் மேற்படி சர்வே எண்.382/3 ல் பகுதிகள் விற்றது எனக்கு தெரியும். சுமார் 20, 25 வருடங்களுக்கு முன்பாகவே மேற்படி இடங்கள் விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் ஏற்றுக்கொண்டுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானே எனது வழக்கில் என்னுடைய சர்வே எண்.16/3 பி தான் என்றும், ஒப்புக்கொண்டு தற்போது நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு மேற்படி கட்டிடம் சர்வே எண்.16/3 சில் இருப்பதாக சொல்வதால் தற்போது நான் சர்வே எண்.16/3 சி தான் பாத்தியம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது வழக்குரையில் நான்கெல்லையில் சர்வே எண் எல்லைகள் குறித்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18) நான் என்னுடைய வழக்குரையில் எனக்கு சர்வே உட்பிரிவு செய்யப்பட்ட போது அறிவிப்பு அனுப்பப்பட்டு மேற்படி உட்பிரிவை நான் ஒப்புக்கொண்டதால் தான் என்னுடைய வழக்குரையில் மேற்படி விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிடை பாத்தியம் கொண்டாடவில்லை என்றால் சரிதான். நான் ஜெயலெட்சுமி

தரப்பினர் இடத்தில் கழிவறை கட்டியுள்ளதால், அதனை அகற்ற வேண்டுமென்றால் சரியல்ல. ஜெயலெட்சுமி, 4ம் பிரதிவாதி பாஸ்கருக்கு சொத்துக்களை பொறுத்து உயில் எழுதிவிட்டதாக கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சொத்து வரி ரசீதும், வருவாய் ஆவணங்களும் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**Signed,**
அந்தோணிசாமி,

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.